மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போரூர் மேம்பாலம் அமைக்கும் பணி எப்போது துவங்கும் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, நானும், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், சென்னை மேயர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியைப் பார்வையிட்டிருக்கிறோம் அந்தப் பகுதியிலே இப்பணிக்காக ஏற்கெனவே, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே ஒப்பந்தம் விடப்பட்டது அப்போது அங்கேயிருக்கின்ற கடை வணிகர்கள் எல்லாம் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடர்ந்த காரணத்தினாலேயே பல ஆண்டுகள் ஆகிவிட்டன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சி வந்தபிறகு, விரைந்து வழக்குகள் முடிவுற்று, இப்போது அங்கு பாலப் பணிகள் நடைபெறுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அங்கே பாலம் அமைக்கக்கூடிய பகுதிக்குக்கீழே குடிதண்ணீர் செல்கின்ற குழாய் இருக்கின்ற காரணத்தாலே, அதை மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கிறது. அது டெண்டர் கமிட்டிக்குச் சென்று, அதற்குப் பிறகுதான் பாலப் பணிகள் மேற்கொள்ளப்படும். டெண்டர் போட்டவர்கள் எவ்வளவு above போட்டு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதையெல்லாம் பரிசீலனை செய்த பிறகு டெண்டர் முடிக்கப்பட்டு, விரைவில் பணிகள் மேற்கொள்ள, அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

141—

தடுப்பணை

*6127—**திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 ஏப்ரல் 4]

(அ) சிதம்பரம் தொகுதி, பிச்சாவரத்துக்கு அருகில் உப்பனாற்றில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, பிச்சாவரம் அருகில் உப்பனாற்றில் தடுப்பணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எழுப்பியுள்ளார். அந்தப் பகுதியிலே ஏற்கெனவே ஒரு ரெகுலேட்டர் அமைத்து தண்ணீர் தேக்கப்பட்டு, உப்புநீர் உட்புகுவது தடுக்கப்பட்டு, விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, பிச்சாவரம் அருகிலே உப்பனாற்றிலே மேலும் ஒரு தடுப்பணை கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று தோன்றுவதால், அங்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிச்சாவரத்திலே ஏற்கெனவே ஒரு ரெகுலேட்டர் இருக்கிற காரணத்தினால், அதற்குக் கீழே தடுப்பணை கட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னார்கள். அந்த ரெகுலேட்டருக்கும் கடற்கரைக்கும் சற்றேறக்குறைய மூன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. இந்த மூன்றரை கிலோ மீட்டருக்கு இடைப்பட்ட தூரத்தில் உள்ள 10—க்கும் மேற்பட்ட கிராமங்களிலே இருக்கின்ற நஞ்சை வயல்கள் கடல்நீர் உட்புகுந்து நாசமாகி விடுகிறது. கிள்ளை பேரூராட்சி உட்பட, பல பேரூராட்சிகள் கடற்கரைக்குப் பக்கத்திலே இருக்கின்ற காரணத்தினால் நிலத்தடி நீர் உட்பட உப்பு நீராக மாறி அங்கே குடிநீருக்குப் பெரும் பஞ்சம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த ரெகுலேட்டருக்கும், கடற்கரைக்கும் இடையிலே இருக்கக்கூடிய ஒரு இடத்தில் அந்த உப்பு நீர் உள்ளே வராமல் தடுத்தால் நிலத்தடி நீரைப் பாதுகாத்து கிள்ளை பேரூராட்சியில் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க முடியும். ஏறக்குறைய 10 கிராமங்களிலே, 3,000—க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் உப்பு நீர் புகுந்து

பாழ்படாமல் பாதுகாக்க முடியும். எனவே, அந்த ரெகுலேட்டருக்குக்கீழே, கடலுக்குப் பக்கத்திலே உப்பு நீர் புகாமல் இருக்க தடுப்பணை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

142—

கால்நடை மருந்தகம்

*** 5327—திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பெருந்தொழுவு ஊராட்சி, கவுண்டம்பாளையத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்லடம் தொகுதி, பெருந்தொழுவு ஊராட்சிக்குட்பட்ட கவுண்டம்பாளையத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்த வினா இங்கு இடம்